DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI

| | | |
|---|---|---|
| CC : 35/19 | S.T.C.: | M.C. : |
| PW : 1 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | இருசா | Caste | |
| Father's Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 187301 the day of | | | 18.02.2020 |

**முதல் விசாரணை-**

நான் அத்திமரதோட்டத்தில் குடியிருந்து கொண்டு, தற்போது பர்கூரில் காவலராக பணிபுரிந்து வருகிறேன். முன்பு ஈரோடு ஆயுதப்படை பிரிவில் 2ம் நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். ஆஜர் 1ம் எதிரியை தெரியும். 2ம் எதிரியையும் தெரியும். எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே பூமி சம்பந்தமாக பிரச்சனை உள்ளது. கடந்த 07.02.19ம் தேதி, மாவட்ட ஆட்சித்தலைவரின் முகாம் அலுவலகத்தில் பாதுகாப்பு பணியை முடித்துவிட்டு எனது வீட்டிற்கு ஓய்விற்காக மாலை 4.00 மணிக்கு சென்றேன். எனது வீட்டிற்கு அருகில் மோட்டார் அறை உள்ளது. அதில் எதிரிகள் இருவரும் மோட்டாருக்கு செல்லும் ஒயரை அறுத்துக்கொண்டிருந்தார்கள். மேற்படி சத்தம் கேட்டு நானும், எனது மனைவி ஐஸ் என்கின்ற அய்யம்மாளும், எனது அம்மா அய்யம்மாளும் சென்று பார்த்தோம். எதிரிகளிடம் எதற்காக ஒயரை அறுக்கிறீர்கள் என்று கேட்டோம். அதற்கு 2 எதிரிகளும், என்னை பார்த்து, தாயோழி, கண்டாரோழி பையனே அப்படிதான் அறுப்பேன் என்று சொன்னார்கள். அறுத்த ஒயரை எடுத்து மோகன் என்பவர் எனது முதுகின் மீது அடித்தார். எட்டி உதைத்து, கீழே தள்ளிவிட்டார். அப்போது சிவக்குமார் கையில் வைத்திருந்த கட்டிங்பிளேடால் எனது உதட்டின் மீது அடித்தார். எனக்கு இரத்தம் வந்தது. எனது மனைவியும், அம்மாவும் சத்தம் போட்டார்கள். அப்போது மோகன் கீழே இருந்த கல்லை எடுத்தும், சிவக்குமார் கட்டிங்பிளேடை காண்பித்தும், இந்த பூமி அவர்களுக்கு சொந்தமானது என்றும், என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்றும் மிரட்டிவிட்டு, கையில் வைத்திருந்த கல், கட்டிங்பிளேடு, ஒயர் ஆகியவற்றை கீழே போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். நான் வலி தாங்கமுடியாமல், இருசக்கர வாகனத்தின் மூலம் பவானி அரசு மருத்துவமனைக்கு வந்து சிகிச்சைக்காக சேர்ந்தேன். நான் சிகிச்சையில் இருந்தபோது, பவானி போலீசார் என்னை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை தாக்க பயன்படுத்திய ஒயர், கட்டிங்பிளேடு மற்றும் கருங்கல்லை பார்த்தால் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஒயர், கட்டிங்பிளேடு மற்றும் கருங்கல்லால்தான் எதிரிகள் என்னை தாக்கினார்கள். மேற்படி ஒயர் **சா.பொ.1**, கட்டிங்பிளேடு **சா.பொ.2**, கருங்கல் **சா.பொ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 ம் எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை -** இல்லை.

**மறுவிசாரணை-** இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI

| | | |
|---|---|---|
| CC : 35/19 | S.T.C.: | M.C. : |
| PW : 2 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | அய்யம்மாள் | Caste | |
| Father's Name | இருசா | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 187301 the day of | | | 18.02.2020 |

**முதல் விசாரணை-**
நான் அத்திமரதோட்டத்தில் குடியிருந்து கொண்டு, இல்லத்தரசியாக உள்ளேன். அ.சா.1 எனது கணவர் ஆவார். ஆஜர் 1ம் எதிரியை தெரியும். 2ம் எதிரியையும் தெரியும். எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே பூமி சம்பந்தமாக பிரச்சனை உள்ளது. கடந்த 07.02.19ம் தேதி, மாலை சுமார் 4.30மணிக்கு எனது கணவர் பணிக்கு சென்றுவிட்டு திரும்ப வந்து, ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தார். அப்போது மோகன் மற்றும் சிவக்குமார் ஆகியோர் மோட்டார் அறைக்கு வந்து, மோட்டாருக்கு செல்லும் ஒயரை அறுத்துக்கொண்டிருந்தார்கள். அதை நானும், எனது கணவரும் எனது மாமியாரும் சென்று கேட்டோம். எனது கணவரின் முதுகில் மோகன் ஒயரால் அடித்துவிட்டார். எதிரிகள் இருவரும் எனது கணவரை கீழே தள்ளிவிட்டார்கள். சிவக்குமார் கையில் வைத்திருந்த கட்டிங்பிளேடால் எனது கணவரின் உதட்டின் மீது அடித்துவிட்டார். நாங்கள் சத்தம் போடுவதை பார்த்து, பொருட்களை கீழே போட்டுவிட்டு, கல்லை எடுத்து நீங்கள் எப்படி இங்கு வாழ்கிறீர்கள் என்று பார்த்துவிடுவோம் என்றும், கொன்றுவிடுவோம் என்றும், கண்டாரோழி பையனே என்று எதிரிகள் இருவரும் பேசினார்கள். பின்னர் எனது கணவர் இருசக்கர வாகனத்தின் மூலம் பவானி அரசு மருத்துவமனைக்கு வந்து சிகிச்சைக்காக சேர்ந்தார். எனது கணவரை தாக்க பயன்படுத்திய ஒயர், கட்டிங்பிளேடு மற்றும் கருங்கல்லை பார்த்தால் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஒயர், கட்டிங்பிளேடு மற்றும் கருங்கல்லால்தான் எதிரிகள் எனது கணவரை தாக்கினார்கள். மேற்படி ஒயர் **சா.பொ.1**, கட்டிங்பிளேடு **சா.பொ.2**, கருங்கல் **சா.பொ.3** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை -** இல்லை.

**மறுவிசாரணை-** இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI

| | | |
|---|---|---|
| CC : 35/19 | S.T.C.: | M.C. : |
| PW : 3 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | அய்யம்மாள் | Caste | |
| Father's Name | தொப்பாநல்லாகவுண்டர் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 187301 the day of | | | 18.02.2020 |

**முதல் விசாரணை-**
நான் அத்திமரதோட்டத்தில் குடியிருந்து கொண்டு, கூலிவேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகன் ஆவார். அ.சா.2 எனது மருமகள் ஆவார். ஆஜர் 1 ம் எதிரியை தெரியும். 2 ம் எதிரியையும் தெரியும். எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே பூமி சம்பந்தமாக பிரச்சனை உள்ளது. கடந்த 07.02.19 ம் தேதி, மாலை சுமார் 4.30 மணிக்கு மோகன் மற்றும் சிவக்குமார் ஆகியோர் எங்களது மோட்டார் அறையின் கதவை எட்டி உதைத்தார்கள். மேற்படி சத்தத்தை கேட்டு, நானும், எனது மகனும், மருமகளும் சென்று கேட்டோம். அதற்கு மோகன் அப்படிதான் ஒயரை அறுப்போம் என்று சொல்லி கோயா, கொம்மா என்று எனது மகனை கெட்டவார்த்தையால் பேசினார்கள். எனது மகனை மோகன் அடித்து கீழே தள்ளி, சிவக்குமார் கட்டிங்பிளேடால் எனது மகனின் உதட்டின் மீது அடித்துவிட்டார். நாங்கள் சத்தம் போடுவதை பார்த்து, எதிரிகள் ஓடிவிட்டார்கள். பின்னர் எனது மகன் இருசக்கர வாகனத்தின் மூலம் பவானி அரசு மருத்துவமனைக்கு வந்து சிகிச்சைக்காக சேர்ந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 ம் எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை -** இல்லை.

**மறுவிசாரணை-** இல்லை.